**பிபிலை பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிபிலை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 4,354,363 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தாமத வழுவினால் வட்டி குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 107,876 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முதிர்ச்சியடையும் நாட்களின் எண்ணிக்கை குறைவாகக் காண்பிக்கப்பட்டமையால் வட்டி வருமானம், குறைவடைந்திருந்ததுடன் 2019 இன் போது சீராக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 100,950 பெறுமதியான தளபாட உபகரணங்கள் மற்றும் அலுவலக | சொத்துக்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். | தாமத வழுக்களினால் மூலதனமாக்குவதற்கு முடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iv) | மீளாய்வாண்டிற்காக 2019 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 29,043 தொகையான செலவினத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தாமத வழுவினால் கடன் கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். |
| (v) | மீளய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 48,675 தொகையான மூலதன செலவினம் வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | மூலதனச் செலவினத்தை வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டவைகள் சீராக்கப்படும். |
| (vi) | ஆண்டின் போது நிறைவேற்றப்படாதிருந்த பதுள்ளகம்மன சமூக நீர்ச் செயற்திட்டத்திற்கு பொருள் உதவி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 310,000 பெறுமதிக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | பொருள் உதவி வழங்குவதற்கு 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி சபை தீர்மானித்திருந்தும் 2019 சனவரி 07 ஆந் திகதி அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்தமையினால் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. |
| (vii) | மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 105,448 தொகையான பிபில மல்லஹேவ தம்பலகெட்டிய பொதுக்கிணறு அபிவிருத்தி வேலை, ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக கணக்குகளில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | தாமத தவறினால் கடன் பட்டோர் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாட்டை ஒதுக்குவதற்கு முடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 128,467,558 தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய காலப் பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படுகின்றது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 139 ஆம் பிரிவு | ஆதனவரி விதிப்பதன் கீழ் ஏதாவதொரு வீடு, கட்டிடம், காணி அல்லது வீட்டுத்தொகுதி என்பவற்றின் வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தவணை அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தவணை அறிக்கை கோரப்பட வேண்டும். | தவணை அறிக்கை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 159 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 1,092,843 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் 2019 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 5,160,699 | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் 2019 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகையான நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 87 கட்டிடத் திட்டங்களுக்குரிய நிர்மாணங்களை பரீட்சிக்கவோ அல்லது தரச் சான்றிதழ் வழங்கவோ இல்லை. | நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்து வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,267,729 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,367,704 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,924,975 | 6,412,936 | 4,192,378 | 2,220,558 | 5,592,301 | 6,073,692 | 3,758,308 | 2,315,384 |
| (ii) | வாடகை | 12,142,338 | 11,609,839 | 9,262,937 | 2,346,902 | 6,853,200 | 9,863,549 | 3,503,561 | 6,359,988 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 250,000 | 350,220 | 350,220 | - | 150,000 | 150,000 | 144,050 | 5,950 |
| (iv) | ஏனைய வருமானம் | 205,000 | 1,181,148 | 1,181,148 | - | 8,642,999 | 8,642,999 | 15,943,210 | - |
| | மொத்தம் | 18,522,313 | 19,554,143 | 14,986,683 | 4,567,460 | 21,238,500 | 24,730,240 | 23,349,129 | 8,681,322 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 19,554,143 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 4,567,460 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 23 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) (i) | சபையினால் 1990 ஆம் ஆண்டின் போது ஆதனவரி அறவிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு சபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை முன்னரே இனங்கண்டு ஆதனவரியை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனவரி அறவிடப்படுகின்ற அதிகாரப் பிரதேசத்தை விரிவாக்குவதற்கு சபை அங்கீகரித்து விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 3,181,513 தொகையான ஆதனவரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,551,256 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 49 சதவீதமாகும். | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.<br><br>i. காலப்பகுப்பாய்வு தயாரித்தல்<br>ii. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு குழு ஒன்றை நியமித்தல்.<br>iii. நிலுவையை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல்.<br>iv. வரியை சேகரிப்பதற்கு உத்தியோகத்தரை களத்தில் ஈடுபடுத்துதல்.<br>v. ரூபா 50,000 இற்கு மேற்பட்ட பெறுமதிக்கு முன்னுரிமை வழங்கி அறவிடுதல்.<br>vi. நடுக்கட்டலை விநியோகித்து ஆதனங்களை தடை செய்தல். |
| (iii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,404,137 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 3,609,444 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அறவிடப்படாத தொகை ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையில் 82 சதவீதமாகும். | நிலுவை ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.<br>i. காலப்பகுப்பாய்வு தயாரித்தல்<br>ii. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு குழு ஒன்றை நியமித்தல்.<br>iii. நிலுவையை அறவிடுவதற்கு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல்.<br>iv. வரியை சேகரிப்பதற்கு உத்தியோகத்தரை களத்தில் ஈடுபடுத்துதல்.<br>v. ரூபா 50,000 |

| | | |
|---|---|---|
| | | இற்கு மேற்பட்ட பெறுமதிக்கு முன்னுரிமை வழங்கி அறவிடுதல்.<br>vi. நடுக்கட்டலை விநியோகித்து ஆதனங்களை தடை செய்தல். |

(ஆ) வியாபார வரி அறவிடல்

| | | |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரசேதத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற 06 வியாபாரங்களில் இருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 51,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வரித் தொகை அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலுவைக் கடை வாடகை | | |
| சபைக்குச் சொந்தமான 103 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 3,137,194 தொகையான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 1,742,994 ஆகும். |
| (ஆ நிலுவை ஆதன வாடகை வருமானம் | | |
| சபைக்குரிய 8 ஆதனங்களில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 1,092,843 வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 241,871 ஆகும். |

**2.2.5 நீர்க்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 915,806 தொகையான நிலுவை நீர்க்கட்டணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 358,367 ஆகும். |

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,341,277 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 3,291,590 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 545,831 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 1,650,741 ஆக இருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட | இதுவரையிலும் விதிக்கப்படாதிருந்த உப விதிகளை விதிப்பதற்கு எதிர்காலத்தில் |

| | | |
|---|---|---|
| 31 வரையிலும் 06 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங்கண்டு அவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பணம் மீளளிப்புச் செய்யப்படாமை | | |
| உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் கொட்டகம பொது நூலகத்திற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 50,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். | ரூபா 50,000 தொகையை மீளளிப்புச் செய்வதற்கு கடிதம் அனுப்பப்படும். |

(ஆ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

| | | |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் பேணிச் செல்லப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 36 தொழில் முயற்சிகளுக்காக உரிய நடவடிக்கை எடுத்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொழில் முயற்சியை பரீட்சித்து குறித்த கட்டணத்தை அறவிட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரம் பெற வெண்டியவர்களுக்கு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டிருந்ததுடன் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல், சிற்றுண்டிச் சாலை அல்லது தங்குமிடங்களுக்காக வரி விதித்தல்

| | | |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 147(i) மற்றும் 149 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவு செய்துள்ள அல்லது அந்த சபை அங்கீகரித்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் அல்லது தங்குமிடங்களில் இருந்து வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களில் இருந்து குறித்த கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உரிய நிறுவனங்களில் இருந்து 01 சதவீத வரி அறவிடுவதற்கான விபரங்களை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த விபரங்கள் கிடைத்ததன் பின்னர் பணம் அறவிடப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் சபையில் 07 பதவிகளுக்குரியதாக காணப்பட்ட 11 ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 21 ஏக்கர் 37.15 பேர்ச் அளவிலான 30 காணிக்கூறுகள் முறையாக மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் 08 ஏக்கர் 01 ரூட் 31.11 பேர்ச் அளவான 07 காணிக் கூறுகளின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்குரிய காணிகளின் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களை மதிப்பீடு செய்து உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குரிய 05 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சபைக்கு சொந்தமான சகல வாகனங்களினதும் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தையும் | சரியான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 08 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும், 05 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | | |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபிக்க வேண்டும். | தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. |